
Koordinationsstelle Häusliche Gewalt
Post da coordinaziun violenza a chasa
Servizio di coordinamento violenza domestica

# வன்முறை தனிப்பட்ட விஷயம் அல்ல. மௌனத்தைக் கலையுங்கள்.



கூட்டாண்மை வாழ்க்கையில் அல்லது குடும்பத்தில் வன்முறை என்பது பல வகைப்படும்.

இது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நடைபெறுகிறது.

நீங்கள் தனியாக இல்லை.

www.gr.ch/haeusliche-gewalt

Koordinationsstelle Häusliche Gewalt
Post da coordinaziun violenza a chasa
Servizio di coordinamento violenza domestica

# குடும்ப வன்முறை என்பது குடும்பத்தில், தற்போதைய அல்லது முந்தைய கூட்டாண்மையில் வன்முறையைக் கையாளுதல் அல்லது அச்சுறுத்துதல் என்பதாகும்.

**வன்முறை வெவ்வேறு வடிவங்களைக் கொண்டது, உதாரணமாக:**
**உடல் ரீதியான வன்முறை:** அடித்தல், தள்ளுதல், உலுக்குதல், கடித்தல் அல்லது இறுக்கிப் பிடித்தல்
**உள ரீதியான வன்முறை:** திட்டுதல், அச்சுறுத்துதல், அவமதித்தல் அல்லது பயமுறுத்துதல்
**பாலியல் வன்முறை:** பாலியல் செயல்களைச் செய்ய ஒருவரைக் கட்டாயப்படுத்துதல்
**பொருளாதார வன்முறை:** பணத்தை எடுத்துச் செல்லுதல் அல்லது வேலையைத் தடை செய்தல்
**சமூக வன்முறை:** ஒருவரைப் பூட்டி வைத்தல் அல்லது குடும்பத்தினர் அல்லது நண்பர்களைச் சந்திப்பதைத் தடை செய்தல்

## குடும்ப வன்முறை அனுமதிக்கப்படாது மற்றும் தண்டனைக்குரியது.

## உதவியை எங்கே பெறலாம்?

**காவல்துறை:** அவசரநிலை உதவி, தொலைபேசி எண் **117**.

**குழந்தைகள் மற்றும் இளைஞர்கள்:** 24 மணி நேரமும் உதவி **147** இல் (தொலைபேசி, வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சல்). மேலதிகத் தகவல்களுக்கு: www.147.ch.

**பாதிக்கப்பட்டோர் ஆதரவு:** வன்முறையால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது உறவினர்களுக்கான ஆலோசனை. இலவசம் மற்றும் ரகசியத்தன்மை காக்கப்படும். மேலதிகத் தகவல்களுக்கு: www.soa.gr.ch அல்லது **081 257 31 50 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்; 081 25 77 142** (நவம்பர் 2025 முதல்) என்ற தொலைபேசி எண்ணில் குறுகிய ஆலோசனைகளுக்கு 24 மணிநேரமும் **தொடர்பு கொள்ளலாம்.**

**பெண்கள் தங்குமிடம்:** பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கான பாதுகாப்பு. மேலதிகத் தகவல்களுக்கு: www.frauenhaus-graubuenden.ch அல்லது **081 252 38 02** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**தடயமருத்துவ ஆலோசனை:** மருத்துவ பரிசோதனை மற்றும் காயங்கள் பற்றிய ஆவணங்கள். இலவசம் மற்றும் ரகசியத்தன்மை காக்கப்படும். தகவல்கள் மற்றும் நியமனங்களுக்கு: www.ksgr.ch/forensic-nursing அல்லது **079 923 11 44** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வன்முறையில் ஈடுபடுவோருக்கான ஆலோசனை:** இலவசம் மற்றும் ரகசியத்தன்மை காக்கப்படும். மேலதிகத் தகவல்களுக்கு: www.gewaltberatungsstelle.gr.ch அல்லது **079 544 38 63** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**சாட்சிகள்:** ஆபத்து இருந்தால், உடனடியாக காவல்துறையை அழைக்கவும் (117). www.gr.ch/haeusliche-gewalt இல் தகவல்கள் மற்றும் ஆலோசனையைப் பெறலாம்.

**முக்கியமான தொலைபேசி எண்கள்:**

**காவல்துறை: 117 (24 மணி நேரமும்)**

**அவசர ஊர்தி: 144 (24 மணி நேரமும்)**

**குழந்தைகள் மற்றும் இளைஞர்கள்**
147 (24 மணி நேரமும்)

**பாதிக்கப்பட்டோர் ஆதரவு கிராவ்புயுண்டென்**
081 257 31 50
081 25 77 142 (நவம்பர் 2025 முதல் 24 மணி நேரமும்)

**பெண்கள் தங்குமிடம் கிராவ்புயுண்டென்**
081 252 38 02 (24 மணி நேரமும்)

**தடயமருத்துவ ஆலோசனை**
079 923 11 44 / forensicnursing@ksgr.ch

குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், ஆண்கள், பெற்றோர்கள், முதியவர்கள், சமூக சூழல் மற்றும் நிபுணர்களுக்கு உதவிக்கான கூடுதல் சலுகைகளை www.gr.ch/haeusliche-gewalt இல் காணலாம்.